දුරකථන ) 011 2669192 , 011 2675011
தொலைபேசி ) 011 2698507 , 011 2694033
Telephone ) 011 2675449 , 011 2675280

ෆැක්ස් ) 011 2693866
பெக்ஸ் ) 011 2693869
Fax ) 011 2692913

විද්‍යුත් තැපෑල ) postmaster@health.gov.lk
மின்னஞ்சல் முகவரி )
e-mail )

වෙබ් අඩවිය ) www.health.gov.lk
இணையத்தளம் )
website )

සුවසිරිපාය
சுவசிரிபாய
SUWASIRIPAYA

මගේ අංකය )
எனது இல )FHB/AH/TP/2014
My No. )

ඔබේ අංකය )
உமது இல )
Your No. : )

දිනය )
திகதி ) 2015-07-08
Date )

# සෞඛ්‍ය හා දේශීය වෛද්‍ය අමාත්‍යාංශය
# சுகாதார மற்றும் சுதேச வைத்திய அமைச்சு
# Ministry of Health & Indigenous Medicine

பொது சுற்று நிருபம் இல:- 01 - 25 /2015

சகல மாகாண செயலாளர்கள் - சுகாதார சேவைகள்
சகல மாகாண பணிப்பாளர்கள் - சுகாதார சேவைகள்
சகல பிராந்திய பணிப்பாளர்கள் - சுகாதார சேவைகள்
சகல பணிப்பாளர்கள்/அலுவலக பொறுப்பாளர்கள் - மருத்துவ நிறுவனங்கள்
சகல பணிப்பாளர்கள்- விசேட நிகழ்ச்சித்திட்டங்கள்
பணிப்பாளர்/ தேசிய நிறுவனம் - சுகாதார விஞ்ஞானம்
சகல மருத்துவ உத்தியோகத்தர்கள் - தாய் மற்றும் சேய் நலம்
பிரதான சுகாதார மருத்துவ உத்தியோகத்தர் - மாநகர சபை, கொழும்பு
சகல மருத்துவ உத்தியோகத்தர்கள் - சுகாதாரம்
தலைவர்கள் - தொழில் வல்லுநர் கல்லூரிகள்

## வளர் இளம் பருவத்தினருக்கு பாலியல் மற்றும் இனப்பெருக்க சுகாதார சேவைகளை வழங்குதல்

மேற்படி விடயம் தொடர்பான சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் 2-29/2011 இலக்கமிடப்பட்டு 07/03/2011 திகதியிடப்பட்ட பொது சுற்று நிருபத்திற்கு மேலதிகமாக வளரிளம் பருவத்தினர் எமது குடித்தொகையில் ஐந்தில் ஒரு பகுதியினராக உள்ளடங்கியுள்ளார்கள். வளரிளம் பருவம் என்பது ஆராய்ச்சியும் கண்டுபிடிப்பிற்குமான காலம். வளரிளம் பருவத்தினர் வேறுபட்ட ஆபத்தான நடத்தைகளில் ஈடுபடுவதன் விளைவாக எதிர்பாராத தேவையற்ற பின்விளைவுகள் ஏற்படுகின்றன. பொறுப்பான வளமிக்க ஆரோக்கியமான இளம் பருவத்தினராக அவர்கள் வளர்வார்கள் என சமுகம் அவர்களை எதிர்பார்க்கின்றது. பெரும்பாலான வளரிளம் பருவத்தினர் கலாச்சார விழுமியங்கள் மற்றும் சமதாய பெறுமதிகள் தொடர்பான எமது எதிர்பார்ப்புகளினை நிறைவேற்றுகிறார்கள். எவ்வாறாயினும் சேவை வழங்குநர்களின் விசேடமான கவனிப்பு தேவைப்படும் குறைந்தளவிலானோர் துணையான மற்றம் விசேடமான பாதுகாப்பு முயற்சிகளினால் மட்டுமே பாதுகாக்கப்படக் கூடியவர்களாயிருக்கிறார்கள்.

வயதில் குறைந்த வளர் இளம் பருவத்தினருக்கு சுகாதார சேவைகளை வழங்குவது பற்றிய சட்ட ரீதியான நோக்கு தொடர்பான பல பிரச்சனைகளை நாம் அவதானித்ததுடன் இதற்கான சட்ட ரீதியான விளக்கம் தலைமைச்சட்ட அதிகாரி திணைக்களத்திலிருந்து எடுக்கப்பட்டது

தலைமைச்சட்ட அதிகாரி திணைக்களத்தினால் 28.05.2013 திகதியிடப்பட்டு CH/CM3/353/10 என்னும் தொடரிலக்கம் இடப்பட்ட மற்றும் 26.01.2015 திகதியிடப்பட்டு E-100/2014 என்னும் தொடரிலக்கம் இடப்பட்ட கடிதங்களில் முக்கியமாகக் காட்டப்பட்ட கீழ்வரும் பகுதிகள் தொடர்பாக உங்களுடைய கவனத்தினை ஈர்க்க விரும்புகிறோம்.

- கற்பழிப்பு உள்ளடங்கலான தகவல்களை வெளிப்படுத்தாமை குற்றவியல் நடைமுறைக்கோவையின் சுற்றுப் பகுதி 21 இல் குற்றமென குறிப்பிடப்படவில்லை. ஆகவே இது தண்டனைச்சட்டக்கோவையின் பகுதி 199 இன் கீழ் தண்டனைக்குரியதல்ல என்பதனால், பாலியல் மற்றும் இனப்பெருக்க சேவைகளை அணுகும் 16 வயதிற்கு கீழ்பட்டோர் கர்ப்பமடைதல் தொடர்பாக சட்டத்தை அமுல்படுத்தும் அதிகாரிகளிடம் அறிவிப்பதற்கு மருத்துவ உத்தியோகத்தர் உள்ளடங்கலான சுகாதார கவனிப்பு அலுவலர்களிற்கு சட்ட ரீதியான கடமை இல்லை.

- வளர் இளம் பருவத்தினருக்கு இனப்பெருக்க சுகாதார சேவைகளை வழங்குதல்
  இது தொடர்பாக வளர் இளம் பருவத்தினரின் நலனை மேற்படி சேவைகளை வழங்கும் மருத்துவ உத்தியோகத்தர் அடிப்படையாக கவனத்தில் கொள்ளல் வேண்டும். அப்படிப்பட்ட தீர்மானம் மருத்துவ உத்தியோகத்தரால் தனித்தனியாக மதிப்பிடப்பட வேண்டும்.

  உதாரணமாக மருத்துவ உத்தியோகத்தர் 18 வயதிற்கு கீழ்பட்டோருக்கு இனப்பெருக்க சுகாதார சேவைகளை வழங்கும் போது இதனைக் கருத்திற் கொள்ள முடியும். அப்படிப்பட்ட சேவைகளை அவர்களுக்கு வழங்காதுவிடின் அவர்கள் (18 வயதிற்கு கீழ்பட்டோர்) பாலுறவினை ஆரம்பிக்கலாம் அல்லது பாலுறவில் ஈடுபடுவதினை தொடரலாம். இது அவர்களுக்கு உடல், உள பாதிப்பினை ஏற்படுத்தும். நாட்டின் கட்டளைச்சட்டத்தினை கருதும் போது, மருத்துவ உத்தியோகத்தர், வளர் இளம் பருவத்தினருக்கான இனப்பெருக்க சுகாதார சேவைகளை வழங்க முன்பு இதற்கான பெற்றோர்/பாதுகாவலரின் சம்மதத்தினை பெறுவதற்கான நியாயமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். எப்படியாயினும் மருத்துவ உத்தியோகத்தர் பெற்றோர்/பாதுகாவலரின் சம்மதத்தினை பெற்றுக்கொள்ள முடியாத இடங்களில் இனப்பெருக்க சுகாதார சேவைகள் பெற்றோரின் சம்மதம் இன்றி பிள்ளையின் சிறந்த நலனைக்கருத்திற்கொண்டு வழங்கப்பட வேண்டும்

- இவ் ஆவணத்தில் உள்ளடக்கப்பட்ட வளர் இளம் பருவத்தினருக்கான பாலியல் மற்றும் இனப்பெருக்க சேவைகளாவன:
  கர்ப்பத்திற்கு முன்னரான பராமரிப்பு, கர்ப்பிணித்தாய்மார்களுக்கான பராமரிப்பு, பிரசவத்தின் போதான பராமரிப்பு, பாலூட்டும் தாய்மார்களுக்கான பராமரிப்பு, பிரசவத்திற்கு பின்னரான கவனிப்பு உள்ளடங்கலாக கருத்தடை/ குடும்ப திட்டமிடல் சேவைகள், கருச்சிதைவுக்கு பின்னரான பராமரிப்பு, பாலியல் தொற்று /HIV இற்குரிய தடுப்பு, பாதுகாப்பு மற்றும்

முகாமைத்துவம், பாலியல் ரீதியான துஷ்பிரயோகத்திற்கான தடுப்பு, பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவம் போன்றன.

எங்களுடைய இளவயதினருக்குரிய நியாயமான மற்றும் நட்புடனான வளர் இளம் பருவத்தினருக்கான சுகாதார சேவைகளை வழங்குவதில் தங்களுடைய ஆதரவிற்கு நாங்கள் நன்றியாகவுள்ளோம். மேலதிக விளக்கங்களிற்காக "பாலியல் மற்றும் இனப்பெருக்க சுகாதார சேவைகள் வழங்குவது பற்றிய சுகாதார அலுவலர்களுக்கான வழிகாட்டுதல்களை தயவு செய்து பார்வையிடவும். மேலதிக தகவல்களினை குடும்ப சகாதார பணியகத்திலிருந்து (011269 2746) பெற்றுக்கொள்ள முடியும்.

நன்றி,

Dr. P.G. மகிபால
சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம்

**Dr. P. G. Mahipala**
**Director General of Health Services**
**Ministry of Health & Indigenous Medicine**
**385, "Suwasiripaya"**
**Rev Baddegama Wimalawansa Thero Mawatha,**
**Colombo 10.**

பிரதி:- செயலாளர்/சுகாதார மற்றும் சுதேச வைத்திய அமைச்சு